சொன்னல் உண்மையிலேயே ஒன்றியங்களின் குறிக்கோளே நிறைவேற்றப்பட முடியாத நிலை ஏற்பட்டுவிடும். ஒன்றியங்கள் தங்களுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளுமேயானல் ஆங்காங்கே தனி மருத்துவ மனைகள் ஏற்படுத்த அரசாங்கம் உதவித் தொகை வழங்க ஆர்வமாக இருக்கும்.

டாக்டர் ச. அ. சின்னராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மலைப்பாங்கான பிரதேசங்கள் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன, அப்படிப்பட்ட பிரதேசங்களிலாவது இரண்டு மருத்துவ மனைகள் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்த அனுமதியளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பின் தங்கிய வட்டாரங்கள் என்பது பல்வேறு கணக்கெடுப்பின் அடிப்படையில் நிர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வெவ்வேறான நிலையை யொட்டி பிற்பட்ட பகுதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒரு மாவட்டத்திலே தொழுநோய் அதிகமாகப் பரவியிருக்கலாம். ஒரு மாவட்டத்திலே காச நோய் அதிகமாக இருக்கலாம், ஒரு மாவட்டத்திலே மலேரியா காய்ச்சல் அதிகமாக இருக்கலாம்: தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தொழுநோயால் பாதிக்கப்பட்டு அதிகம் பேர்கள் இருக்கிறார்கள். வெளிநாட்டினரின் உதவியோடு அந்த மாவட்டத்தில் தொழுநோய்த் தடுப்புக்கு—தடுப்பு என்றால் அந்த நோய் வாராமல் முன் கூட்டித் தடுப்பது அல்ல, வந்த நிலையில் சிகிச்சை யளிக்கின்ற நிலை—சிகிச்சைத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சக்தி குழாய் நிறுவன தொழிலாளர்களுக்கு சட்டுறுதித் திட்டம்

*89. **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எளாவூர் சக்தி குழாய்த் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவ வசதித் திட்டம் நீட்டிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : எளாவூர் சக்தி குழாய்த் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவ வசதித் திட்டத்தை நீட்டிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருந்தது. அச் செயற்குறிப்பை அரசு மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத் துறை இயக்குநருடன் கலந்து பரிசிலனை செய்தபின் கீழ்க்கண்ட காரணங்களுக்காக அதனை தற்போது நிறைவேற்ற இயலாது என முடிவெடுக்கப்பட்டுள்ளது :—

(1) எளாவூரில் சக்தி குழாய்த் தொழிற்சாலை மட்டுமே உள்ளது; அதனைத் தவிர, எளாவூரின் அருகாமையில் சுற்றுப்புறத்தில் வேறு எந்த தொழிற்சாலைகளும் இல்லை ;

1972 டிசம்பர் 8]

(2) மேற்குறிப்பிட்ட தொழிற்சாலையில் பணிபுரியும் சுமார் 400 தொழிலாளர்களுக்காக மட்டும் இ.எஸ்.ஐ. மருந்தகம் ஒன்று எளாவூரில் தனியே அமைப்பது என்பது இயலாது; மேலும்

(3) மேற்குறிப்பிட்ட தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களுக்கு 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மீஞ்சூர் இ.எஸ்.ஐ. மருந்தகத்தில் மருத்துவ வசதி அளிப்பது தொழிலாளர்களுக்கு வசதியாக இருக்காது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, நானூறு தொழிலாளர்கள் இருக்கிற அந்தத் தொழிற்சாலை அரசாங்கத்தினுடைய உதவியோடு மறுபடியும் திறக்கப்பட இருக்கின்ற நிலையில் அங்கே பணியாற்றுகின்றவர்கள் 400 தொழிலாளர்கள்தான். வேறு தொழிற்சாலை இல்லை. ஆகவே, இயலாது என்று அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். அங்கே நானூறு தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அங்கே ஒரு தொழிற்சாலைதான் இருக்கிறது. வேறு தொழிற்சாலை இருக்க முடியாது, காரணம் அந்த ஒரு தொழிற்சாலையும் ஆந்திர எல்லையிலேதான் இருக்கிறது, வேறு தொழிற்சாலை வரவேண்டுமென்றால் ஆந்திராவிலேதான் வரவேண்டிய நிலை இருக்கிறது. எனவே இந்த நிலையில் அதற்கு சிறப்புத் திட்டமாக ஸ்பெஷல் கேஸ் என்ற முறையிலே ஒரு இ.எஸ்.ஐ. மருத்துவமனை துவங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: குறைந்த பட்சம் 750 தொழிலாளர்கள் உள்ள இடத்தில்தான் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்திருக்கிறது. அதுபோல் எளாவூரிலும் அந்த அளவிற்கு வந்தவுடனே அரசு ஆவன செய்யும்.

Welfare Department schools at Pechiparai and Pathukani

* 90 *Q.*—Thiru J. JAMES: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether it is a fact that the Welfare Schools at Pechiparali and Pathukani are run without sufficient number of teachers in each school;

(*b*) if so, the number of students and teachers in each school; and

(*c*) what action has been taken by the Government to provide sufficient number of teachers to these schools?